[1972 ஆகஸ்ட் 23

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, அரசுக்கு வர வேண்டிய பணத்தை அதிக நாள் விட்டு வைக்காமல் உடனடியாக வசூல் செய்யக் கூடிய முறை தெரிவிக்கப்பட்டதா? அது கையாளப் பட்டதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, சொல்லாமலேயே அரசு அந்தக் காரியங்களில் ஈடுபட்டுக்கொண்டிருப்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : சிக்கன நடவடிக்கையின் காரணமாக பணம் மிச்சப்பட்டது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உத்தேசமாக எவ்வளவு தொகை மிச்சப் பட்டிருக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மத்திய அரசிடம் நாம் பணம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இந்த ரகசியங்களையெல்லாம் வெளியிடுவது நல்லதல்ல.

Teachers standing for Election to the State Legislative **Council.**

@ * 74 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether teachers employed in Government Schools are prohibited from standing for election to the Legislative Council from the Teachers' Constituencies ;

(b) if so, the reasons therefor; and

(c) whether there is any proposal to relax this rule?

ஆசிரியர்கள் தமிழ்நாட்டு சட்ட மன்ற தேர்தலுக்கு போட்டியிடுதல்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசுப் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்கள், ஆசிரியர்கள் தொகுதிகளிலிருந்து தமிழ்நாடு சட்ட மன்ற மேலவைத் தேர்தலுக்குப் போட்டியிடுவதினின்றும் தடைப்படுத்தப் பட்டுள்ளனரா?

@ ......வினுப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்டது.

1972 ஆகஸ்ட் 23]

(இ) ஆமெனில், அதன் காரணங்கள் யாவை?

(உ) இந்த விதியைத் தளர்த்தும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) அவர்கள் இந்திய அரசியல் சட்டம் மற்றும் தேர்தல் சட்ட விதித்துறைகளின்படி நாடாளு மன்றம் அல்லது மாநில சட்ட மன்றத்திற்கு நடைபெறும் தேர்தல்களில் வேட்பாளராக நிற்பதற்கு தகுதி இழந்தவர்கள் ஆகிறார்கள். அரசுப் பணியாளர் ஒழுக்க விதியும் அரசு ஊழியர்கள் இம்மன்றங்களுக்கு நடைபெறும் தேர்தல் களில் வேட்பாளராக நிற்பதைத் தடை செய்கிறது.

(உ) இல்லை.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவரவர்களே, ஆசிரியர் தொகுதி சம்பந்தமாக நமது அரசு மத்திய அரசுக்கு எத்தனையோ பரிந்துரை கள் செய்திருக்கின்றது. குறிப்பாக, ஆசிரியர்கள் அல்லாதவர்கள் சட்டமன்ற மேலவைத் தேர்தலுக்கு நிற்கக் கூடாது என்பது பற்றி யும், தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு வாக்குரிமை கொடுப்பது பற்றியும் நமது அரசு என்ன பரிந்துரைகள் செய்திருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இரண்டு மூன்று வினுக் களைச் சேர்த்துக் கேட்டிருக்கிறார்கள். 31—3—1966-இல் இருந்த பழைய காங்கிரஸ் அரசு மத்திய அரசுக்கு எழுப்பிய கடிதத்தின் மீது ஒரு அபிப்பிராயத்தைத் தெரிவித்தது. அதில், ஆசிரியர்கள் அரசியலில் ஈடுபடாமலும், அவர்களுடைய முறையான பணிகளை எப்போதும் கவனிக்குமாறு செய்வதற்கும் ஒரு வழியாக ஆசிரியர்கள் அனைவரையும்—தனியார் கல்வி நிறுவனங்களில் பணி புரியும் ஆசிரியர்கள் உட்பட—மத்திய அல்லது மாநில சட்டமன்றங்கள் அல்லது மக்கள் மன்றங்கள் ஆகியவற்றுக்கான தேர்தல்களில் போட்டியிடாமல் தடை செய்ய வேண்டும். சட்டமன்ற மேலவை யில் தற்போது ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பிரதிநிதித் துவத்தை ரத்து செய்யும் வகையில் அரசியல் அமைப்புச் சட்டத்தின் விதிகளை நீக்குவதற்குத் திருத்தம் ஒன்று செய்யப்பட வேண்டும். தனியார் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களை மேற்கூறிய தேர்தல் களில் போட்டியிடாமல் தடை செய்வதற்காக நாடாளுமன்றத்தில் சட்டம் ஒன்று இயற்றப்படலாம்.

மேற்கூறிய கருத்துக்களை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு தமிழக அரசு மத்திய அரசுக்குத் தெரிவித்தது. இது குறித்து மத்திய அரசு பரிசீலனை செய்து வருவதாகத் தெரிகிறது. இதற்கிடையே புதிய அரசு 1967-க்குப் பிறகு பொறுப்பேற்ற பிறகு, இன்றைய அரசு, ஆசிரியர்கள் தொகுதியை நீக்குவது நல்லதல்ல என்கின்ற கொள்கையை அறிவித்திருக்கிறது. முன்பிருந்த மாநில அரசு, சட்டமன்ற மேலவையில் ஆசிரியர்களுக்காக கொடுக்கப்பட்டுள்ள பிரதிநிதித்துவத்தை ரத்து செய்ய வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தது. இப்படிப்பட்ட நிலையில், தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு வாக்குரிமை அளிக்கும் கேள்வி எழவே இல்லையே என்று மத்திய அரசு மாநில அரசைக் கேட்டுள்ளது. இதற்கு மத்திய அரசு அனுப்பிய பதிலில், "உங்கள் அரசு ஆசிரியர்கள் தொகுதியை எடுத்துவிடுமாறு கூறியிருக்கிறதே, இப்போது ஓட்டுரிமை கேட்கிறீர்களே, இந்த இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கிறதே" என்று தெரிவித்திருக்கிறார்கள். நாங்கள், ஆசிரியர்கள் தொகுதி இருக்க வேண்டுமென்று வலியுறுத்தி மத்திய அரசுக்குக் கடிதம் எழுதுவதாக இருக்கிறோம்.

Assistant Headmasters in Government (Board) High Schools

* 217 Q.—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether there are any proposals under the consideration of the Government to appoint Assistant Headmasters in Government (Board) High Schools in this State?

அரசினர் (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் உதவித் தலைமை ஆசிரியர்கள்.

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம்மாநிலத்திலுள்ள அரசினர் (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் உதவித் தலைமை ஆசிரியர்களை நியமிப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.